03.10.2017

தினமணி

## பாசனத்துக்காக 5-இல் பவானிசாகர் அணை திறப்பு



பாசனத்துக்காக பவானிசாகர் அணையில் இருந்து வரும் வியாழக்கிழமை (அக். 5) முதல் தண்ணீர் திறந்து விடப்படும் என்று முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட அறிவிப்பு: ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையில் இருந்து பாசனத்துக்காகத் தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. இந்தக் கோரிக்கையை ஏற்று ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் , சத்தியமங்கலம், அந்தியூர், ஈரோடு, பவானி வட்டங்களில் உள்ள அரக்கன்கோட்டை , தடப்பள்ளி, காலிங்கராயன், கீழ்பவானி திட்ட வாய்க்கால்களின் வழியாக முதல்போக பாசனத்துக்காக பவானிசாகர் அணையில் இருந்து வரும் வியாழக்கிழமை (அக். 5) முதல் நீர் திறந்து

விடப்படும். இதனால் , ஈரோடு மாவட்டத்திலுள்ள ஒரு லட்சத்து 43 ஆயிரத்து 747 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

பாபநாசம்-மணிமுத்தாறு: இதே போன்று , பிசான பருவ சாகுபடிக்காக பாபநாசம் , சேர்வலாறு, மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களில் இருந்து வரும் வியாழக்கிழமை (அக். 5) முதல் நீர் திறந்து விடப்படும்.

இதனால், தாமிரவருணி பாசன அமைப்பிலுள்ள வடக்கு-தெற்கு கோடை மேலழகியான் கால்வாய்கள், நதியுண்ணி கால்வாய், கன்னடியன் கால்வாய், கோடகன் கால்வாய், பாளையங் கால்வாய் , திருநெல்வேலி கால்வாய் , தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள மருதூர் மேலக்கால் கால்வாய், மருதூர் கீழக்கால் கால்வாய், தெற்கு பிரதான கால்வாய் , வடக்கு பிரதானக் கால்வாய் ஆகிய கால்வாய்களில் தண்ணீர் திறந்து விடப்படும். இதனால், 86 ஆயிரத்து 107 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.